செய்திருக்கிறது. 107 மூட்டைகளைக் கைப்பற்றியிருக்கிறார்கள். (மணியடிக்கப்பெற்றது) முக்கியமான சப்ஜெக்ட். அதேபோல, 14-2-2007-ல் இந்தியக் கடற்படை நாட்டுப் படகு ஒன்றைக் கைப்பற்றி இருக்கிறது. மூன்று இலங்கைத் தமிழர்கள், அதிலே கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். 2,500 கிலோ-126 மூட்டை அலுமினியக் கட்டிகளையும் கைப்பற்றியிருக்கிறார்கள். 'Q' Branch, மதுரையிலே 2 பேரைக் கைது செய்திருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஞானசேகரன், பேசி முடியுங்கள்.

திரு. சி. ஞானசேகரன்: அதேபோல, 13-2-2007-லே ரோந்து போகிறபோது, பாக் ஜலசந்தியிலே இந்தியக் கடலோர ரோந்துப் படை கைப்பற்றி ஐந்து பேரைக் கைது செய்திருக்கிறார்கள். அதிலேதான், இங்கே மனித வெடிகுண்டு, ஜாக்கெட் போன்றவையெல்லாம் கைப்பற்றப்பட்டிருக்கின்றன. அதேபோல, 18-2-2007-லே கண்ணன் என்பவரைக் கைது செய்து, பிறகு 7 கமுதி இளைஞர்களைத் திண்டுக்கல்லிலே கைது செய்திருக்கிறார்கள். 19-2-2007, அதேபோல 6-3-2007, 7-3-2007, 10-3-20007, 14-4-2007. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சீக்கிரம் பேசி முடியுங்கள்.

திரு. சி. ஞானசேகரன்: முடித்துவிட்டேன். ஆக 17 நிகழ்வுகள்; விடுதலைப் புலிகளுடைய வெடிபொருட்கள், அதேபோல மருந்துகள், டீசல் போன்றவற்றையெல்லாம் அவர்கள் கடத்துகிறபோது, கைப்பற்றியிருக்கிறார்கள். அதற்குச் சில பேர் கடலோரப் பகுதியில் இருக்கக்கூடியவர்கள், விடுதலைப் புலிகளுக்கு agent-ஆக இருநது, அவர்களுக்குத் துணைபோய்க் கொண்டிருக்கிற காரணத்தினால் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஞானசேகரன், சற்றுப் பொறுங்கள்.

பிற்பகல் 1-40

6. அரசினர் தீர்மானம்

விதி 32-ஐத் தளர்த்துதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 26-4-2007 அன்று வினாக்கள்-விடைகள் நேரத்தை ஒத்திவைப்பது குறித்த தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

[2007 ஏப்ரல் 25

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையின் முதல் ஒரு மணி நேரம் வினாக்கள்-விடைகள் என்று உள்ள சட்டமன்றப் பேரவை விதி 32-ஐ, 26-4-2007, வியாழக்கிழமை அன்று தளர்த்தி அந்நேரத்தை அரசினர் அலுவல்களுக்கு எடுத்துக்கொள்ள வேண்டும்"

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

நாளை 26-4-2007 அன்று வினாக்கள்-விடைகள் நேரம் இல்லை.

இன்று, பேரவை எடுத்துக்கொண்ட மானியக் கோரிக்கைகள்மீதான விவாதம், நாளையும் தொடரும்.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-41 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

54. 2005-2006 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழகத்தின் ஆண்டு நிதிக் கணக்குகள் மற்றும் தணிக்கை அறிக்கை. [1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 42/1989) 51 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)